

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி துவாக்குடி நகராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் துவாக்குடி நகர் மன்ற தலைவரும் நகர செயலாளருமான காயாம்பு, உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாவட்ட மேலாளர் டாஸ்மார்க் திருமாவளவன், துவாக்குடி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, திருவெறும்பூர் தாசில்தார் ஜெயபிரகாசம், நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வம் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் என ஏராளமானோர் இந்த முகாமில் கலந்து கொண்டனர்.



"ஓரணியில் தமிழ்நாடு வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை நிகழ்வில், குன்னூர் சட்டமன்றத் தொகுதி, எடப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட அளகரை கிராமத்தில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் நேரில் சென்று பொதுமக்களைச் சந்தித்துப் பேசி,கழக உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். உடன் குன்னூர் ஒன்றிய கழக செயலாளர் பிரேம்குமார், மகாலிங்கம்,BLA2,BDA கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருப்பூர் மாவட்டம்

# பொங்கலூர் ஒன்றியத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

திருப்பூர், ஜூலை 19-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம் தலைமையில் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், அலகுமலை ஊராட்சி, ஸ்ரீ வேலன் திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல் கட்டமாக 120 முகாம்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரையிலும் நடைபெற உள்ளது. மேலும், இரண்டாம் கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும், மூன்றாம் கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்களுக்கும் அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறையின் சேவைகள், திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 15.07.2025 முதல் 14.08.2025 வரை நடைபெற்று வரும் முகாம்களில் மாநகராட்சியில் 7 முகாம்களும், நகராட்சியில் 20 முகாம்களும், பேரூராட்சிகளில் 7 முகாம்களும், ஊரக பகுதிகளில் 66 கிராம பஞ்சாயத்து மற்றும் 20 பெரி அர்பன் பகுதி என மொத்தம் 120 முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாம்களானது காலை 9.00 மணிக்கு தொடங்கி மாலை 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் இன்று உடுமலைப் பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1,2,3 ஆகிய பகுதிகளுக்கு லயன்ஸ் கிளப்பிலும், குன்னத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1,2,3,4,5,6,7 மற்றும் 8 ஆகிய பகுதிகளுக்கு குன்னத்தூர் நாடார் திருமண மண்டபத்திலும், காங்கேயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரஞ்சேர்வழி, மருதுரை ஊராட்சிகளுக்கு பரஞ்சேர்வழி வில்லியகுல திருமண மண்டபத்திலும், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அலகுமலை, என்.அவிநாசிபாளையம் ஊராட்சிகளுக்கு அலகுமலை ஸ்ரீ வேலன் திருமண மண்டபத்திலும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சோமவாரப்பட்டி ஊராட்சிக்கு பெதப்பம்பட்டி எஸ்.ஹச்.ஜி கட்டடத்திலும், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆலாம்பாளையம், குறிச்சிக்கோட்டை, பள்ளபாளையம் ஊராட்சிகளுக்கு குறிச்சிக்கோட்டை விபிஆர்சி கட்டடத்திலும் நடைபெற்று வருகிறது. எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெறவுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர், பொங்கலூர் ஒன்றியக் குழு முன்னாள் தலைவர், வழக்கறிஞர் எஸ்.குமார், கிழக்கு மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் உகாயனூர் பி.கே.கனகராஜு, பொங்கலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பாலுச்சாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஈ.பால சுப்பிரமணியம், பொங்கலூர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் தொப்பம்பட்டி லோகு உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மண், மொழி, மானம் காக்க கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் துவக்கிய 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு பணியை புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம் சுந்தம்பட்டி ஊராட்சி ராஜாப்பட்டி பாகம் எண் 163ல் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் பரமசிவம், எம்.ராஜா, ஜானகிராமன், பி.கே.பி.சிங்கமுத்து, என்.எம்.முருகேசன், ரவிச்சந்திரன், நியூஸ் ராஜேந்திரன், பூத் டிஜிட்டல் ஏஜென்ட் அரவிந்த், ராமராஜன், எஸ்.ஆர்.கலையரசன், எழில் ராஜா, வினோத் குமார், கருப்பையா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பரப்புரை மேற்கொண்டு உறுப்பினர்களை கழகத்தில் இணைத்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள்மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அச்சமங்கலம் ஊராட்சியில் ரூ.153 இலட்சம் மதிப்பீட்டில் ஒரப்பம் செந்தாரப்பள்ளி சாலைகள் இராசிப்பள்ளி வரை புதியதாக சாலை மேம்படுத்தல் மற்றும் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இராசிப்பள்ளி முதல் ஜெகதேவி வரை காளனூர் தார் சாலை மேம்படுத்தல், காரக்குப்பம் ஊராட்சியில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்கு 3.33 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட தி.மு.க . நிர்வாகிகள் அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் அதியமான் கோட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமினை தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.உடன் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஏ.எஸ்.சண்முகம், உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம்

# குன்னூர் நகராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

### அரசு தலைமைக் கொறடா கா. இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

குன்னூர், ஜூலை 19 -

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்,

அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் - மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமண மண்டபத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடிய நிகழ்ச்சியினை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி க்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற உங்களு டன் ஸ்டாலின்"; திட்ட முகாமில் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண் டார்.

இந்நிகழ்வில், அரசு தலைமை கொறடா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தினை. முதலமைச்சர் அவர்கள். இன்றைய தினம், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாண்டையார் திருமன மண்டபத்தில் நொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு. மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. நமதுமாவட்டத்திலும் இன்றைய தினம் 6 இடங்களில் முகாம்கள் நடைபெற்று வருகிறது. இதில் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகினாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நானும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு நடைபெற்று வரும் முகாமினை பார்வையிட்டோம். இம்முகாமில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களை அழைத்து செல்ல ஏதுவாக சக்கர நாற்காலி, காவல் துறை மூலம் (உதவி மையம்). பதிவு செய்யும் இடம் உள்ளிட்ட

அனைத்து வசதிகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

16.07.2025 அன்று உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டுகளுக்கான முகாம் சுங்கம் சி.எஸ்.ஐ சமுநாய கூடத்திலும், குன்னூர் வட்டம் பர்வியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கோடமலை சமுதாயக் கூடத்திலும், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக் கான முகாம் சோலூர் மட்டம் ஊராட்சி அலுவலகத்திலும் நடைபெற்றது. மேலும், 'உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. நமது மாவட்டத்தில் 5 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 35 கிராம ஊராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில், நகர்ப்புற பகுதிகளில் 65 முகாம்களும், ஊரக பகுதியில் 81 முகாம்களும் என மொத்தம் 146 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக 67 முகாம்களும், இரண்டாம் கட்டமாக 16.8.2025 முதல் 14.9.2025 வரை 42 முகாம்களும், மூன்றாம் கட்டமாக 15.9.2025 முதல் 14.10.2025 வரை 37

முகாம்களும் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தி துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை போன்ற துறைகள் 3 மூலமாகவும் பல்வேறு வகையான 45 சேவைகள் வழங்கப்படுகிறது. இன்று விண்ணப்பம் அளித்த பொதுமக்களின் கோரிக்கைகள் 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். முன்னதாக, அரசு தலைமை. கொறடா, மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், மற்றும் அரசு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு அரங்குகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட அரங்கம் ஆகிய வற்றினையிட்டார்.

பார்வை அதனை தொடர்ந்து, அரசு தலைமை கொறடா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம் வண்டிசோலை ஊராட்சி சோலாடா மட்டம் என்.என்.டி. சுட்டடத்திலும், ஜெகதனா பேரூராட்சிக் குட்பட்ட ஜெகதளா கிராம சமுதாய கூடத்திலும், அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட பிக்கோல் சமுதாய கூடத்திலும் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். முன்னதாக.

அரசு தலைமை கொறடா, குன்னூர் பேருந்து நிலையத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன வாகனத்தின் மின்னணு மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்" திட்டம். தொடர்பாக ஒளிபரப்பப்பட்ட குறும்பாடலை, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், சமூக பாதுகாப்பு திட்டம் (தனித்துணை ஆட்சியர்) ராதாகிருஷ்ணன், குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி, குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, துணைத்தலைவர் வாசிம்ராஜா, உதவி இயக்குநர் தொழிலாளர் நலத்துறை லெனின், மாவட்ட வழங்கல் அலுவலர்சரவணன். திட்டக்குழு உறுப்பினர் ராமசாமி, குன்னூர் வட்டாட்சியர் ஜவகர், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.விஜயா உட்பட பலர் உடனிருந்தனர்.

## சோ.பா.மலர்வண்ணன் தலைமை!

# திருக்குவளையில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

### என்.இளையராஜா – ஆரூர்.மணிவண்ணன் – இரா.ப்ரீத்தி சிறப்புரை!

### கோசி.குமார், பி.என்.கார்த்தி பங்கேற்பு!

நாகை, ஜூலை 19 -

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் திருக்குவளை கடைத் தெருவில் நடைபெற்றது. தெருமுனை பிரச்சார கூட்ட த்திற்கு கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.கார்த்தி வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர்கள் எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.தேவராஜன், வி.குமரேசன், எஸ்.சக்கரவர்த்தி, எம்.ஸ்டாலின், ஜெ.அருண்குமார், என்.விக்னேஷ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், தாட்கோ தலைவருமான என்.இளையராஜா, நாகை மாவட்டக் கழக துணைச் செயலாளரும், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர்.மணிவண்ணன், இளம் பேச்சாளர் இரா.ப்ரீத்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஆர்.ஜி.தமிழரசின், ஒன்றிய நிர்வாகிகள் வை.சண்முக சுந்தரம், எஸ்.கே.பார்த்திபன், கே.சுரேஷ், வி.எஸ்.குமார், பி.நிர்மல்ராஜ், எஸ்.வடுகநாதன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வி.எம்.கே.பாலாஜி, குவளை சோ.கணேசன், பொன்.சண்முகநாதன், இ.ஜோதிபாசு, பி.தியாகராஜன், வீரராகவன், எம்.செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.குமார் நன்றி கூறினார்.




முதலமைச்சர்,கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மகத்தான திட்டமான 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் கோட்டூர் தெற்கு ஒன்றியம் பெருகவாழ்ந்தானில் நடைபெற்றது இந்த முகாமில் தமிழ் நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்று துவக்கி வைத்தார் , இந்த நிகழ்ச்சியில் கோட்டூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ்.ஆர்.தேவதாஸ், வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பால.ஞானவேல் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து , மாவட்ட செயற்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், மாவட்ட ஆட்சியாளர் மோகனச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த முகாமில் பல்வேறு துறைகளில் கீழ் பயன் பெற வந்த பொது மக்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு பெரும்பாலான மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டது.